## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 28.06.2024ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

### நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட பொருள்

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள், எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் கட்டி 40 வருடங்களை கடந்துள்ளதால் மேற்கண்ட கடைகள் அதன் ஸ்திரத்தன்மை இழந்துள்ளது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள வணிக வளாக கடைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கடைகள் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் திட்டமதிப்பீடு தயார் செய்து சமர்பிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 22.06.2024 அன்று நடைபெற்ற சட்டமன்ற மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் புன்செய்ப் புளியம்பட்டியில் புதிய வணிக வளாக கடைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து வரப்பட்டுள்ளது. மேற்கண்ட வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு மானியக்கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இத்திட்டத்தை இந்நகராட்சிக்கு வழங்கிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களுக்கும், அதற்காக பரிந்துரை செய்த மாண்புமிகு நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.இராசா அவர்களுக்கும் இந்நகர்மன்றத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மான எண் : 07**
**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது.**

### நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பொருள்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட புன்செய்ப் புளியம்பட்டி கிராமம் க.ச.எண். 128/1C2A காலையில் சிவராயப்பன்–1, வரதராஜன்–2, ராஜாமணி–3, செல்வநாயகி–4, சண்முகம்–5, மாணிக்கம்–6, இராமேஸ்வரன்–7, தண்டபாணி–8, பழனிச்சாமி–9, ஜம்புலிங்கம்–10, சுப்பிரமணியம்–11, ராஜலட்சுமி–12 ஆகிய நபர்களுக்கு பாத்தியப்பட்ட புன்செய்ப் புளியம்பட்டி கிராமம் க.ச.எண்.128/1C2A நெ.காலையில் கட்டுப்படும் கிழமேல் 16அடி அகலமும், தென்வடல் 272.5 அடி நீளமுமாக 4360 சதுர அடி/பு.ஏக்.0.10 செண்ட் பரப்பளவுள்ள தென்வடல் நீளி பொது தடத்தில் பொதுவில் 20ல் 12 பங்கு தடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தானமாக கிரைய ஆவண எண்.4110/2024–ன் மூலம் இந்நகராட்சிக்கு ஒப்படைதுள்ளார்கள். மேற்படியார் அனைவருக்கும் இந்நகர்மன்றம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. மேலும் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட சொத்தை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண் : 08**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.01</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அம்ருத் 2.0 2022–23ன் கீழ் குடிநீர் அபிவிருத்திப் பணிக்கு ரூ.52.07 கோடி மதிப்பீட்டில் அரசாணை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.09.09.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டு, கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

| S. No | Name of the Project | Approved Project Cost (Rs. in Cr) | GOI Share (50%) | GOTN Share (30%) | ULB Share (20%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | KNMT Share (10%) | SUIDF Share (10%) |
| 1. | Improvement of Water Supply Distribution System to Punjai Puliampatti Municipality | 52.07 | 26.04 | 15.62 | 5.20 | 5.20 |

மேற்படி திட்டத்திற்கு, அரசாணை எண்.129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.23.09.2022–ன் படி, நகராட்சி பங்குத்தொகை ரூ.10.40 கோடியில் 50% தொகை ரூ.5.20 கோடி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT)–ல் இருந்து நிதி பெறப்பட்டு ஈடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 50% தொகை ரூ.5.20 கோடியினை இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11830/2024/AMRUT–1, நாள்.16.05.2024–ல் State Urban Infrastructure Development Fund (SUIDF) திட்டத்தின் கீழ் கடனாக பெற்று 4% வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகளுக்கு செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்டவாறு வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகளுக்கு திரும்ப செலுத்த நகர்மன்றத்தின் அனுமதிக்கும், அதற்கான முன்மொழிவு அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்:1299/2020/இ1)**

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 09**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.02</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகராட்சி பகுதிக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரை சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் குளோரின் கேஸ் சிலிண்டர் ஒரு வருடத்திற்கு

விநியோகம் செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.896/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024–2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 10**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.03**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் சுத்திகரிப்பு செய்ய பயன்படுத்தப்படும் Chlorination Plant–ஐ வருடாந்திர பராமரிப்பு (AMC) செய்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.3.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.895/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024–2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 11**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.04**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நம்பியூர் சாலையில் நெடுஞ்சாலை துறையினரால் சாலை விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வந்தபோது மேற்படி இடத்தில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பிரதான குடிநீர் குழாய்கள் சேதமடைந்தது. இந்நிலையில் அச்சமயம் பாராளுமன்ற தேர்தல்–2024 நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி இடத்தில் புதிதாக 40mm PVC மற்றும் 75mm PVC குழாய் பொருத்த தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்–2023 பிரிவு–57ன் கீழ் ரூ.1.00 மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.591/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண் : 12**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.05**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02, செங்குந்தபுரம் மற்றும் வார்டு எண்.09, திரு.வி.க இணைத்தெரு பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக 5 குதிரை திறன் கொண்ட ஒரு மின்மோட்டார் மற்றும் 3 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பொருத்தி தருமாறு மேற்கண்ட வார்டுகளின் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததற்கிணங்க மேற்படி இடத்தில் புதிதாக மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அச்சமயம் பாராளுமன்ற தேர்தல்–2024 தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி இடத்தில் புதிதாக மின்மோட்டார் பொருத்த தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்–2023 பிரிவு57ன் கீழ் ரூ.3.30 மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.681/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண் : 13**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.06**

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி இந்நகராட்சிகுட்பட்ட கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் தானியங்கி மழைநீர் அளவுமானி அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அச்சமயம் பாராளுமன்ற தேர்தல்–2024 தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால் இந்நகராட்சிக்குட்பட்ட கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் தானியங்கி மழைநீர் அளவுமானி அமைத்திட தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்–2023 பிரிவு57ன் கீழ் ரூ.1.50 மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு செலவிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.681/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண் : 14**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.07**

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று ஈப்பு வாகனங்களுக்கு ஒரு வருடத்திற்கான ஆயுள் காப்பீடு, பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள (ஜூலை–2024 முதல் மார்ச்–2025 வரை) ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.894/2024/இ1)**

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இச்சசெலவினத்தை 2024-2025 ஆம் ஆண்டின் பொது நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 15**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.08</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 – 2023-2024ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட Material recovery Facility Center அமைத்தல் பணிக்காக 10.06.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை பகுதியில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட Material recovery Facility Center அமைத்தல் பணி | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு.எம்.சுப்பிரமணியம், காராப்பாடி | 1.13% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.14% குறைவாக வழங்கியுள்ள திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.362/2024/இ1)

அலுவலக குறிப்பு :

அ) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண் : 16**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.09</u>

1.தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களுக்கு வருடாந்திர பங்களிப்பு தொகை செலுத்தவும் மற்றும் இந்நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் பயிற்சி பெற 2024-25 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2.நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளை நடத்த வழக்கறிஞர்களுக்கு வழக்குக் கட்டணம் 2024–25 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 468/2024/சி1)**

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 17**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.10</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.891/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ)இப்பணியினை 2024–2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 18**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.892/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ)இப்பணியினை 2024-2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 19**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.12</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோககுழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.893/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024-2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 20**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.13</u>**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2024-2025ஆம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள், A4 Paper, Legal Paper, கணினி இரசீதுகள், எழுது பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.719/2024/டி1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 21**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.14</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2571/2017/J1, நாள்:23.04.2018-ல்தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் அமைந்துள்ள வீடுகளுக்கு ஏற்றார்போல் (DBC - DOMESTIC BREADING SOURCE CONTROLOR) கொசு ஒழிப்பு பணியாளர்களை 300 வீடுகளுக்கு ஒரு கொசு ஒழிப்பு

பணியாளர்களை நியமிக்கப்பட வேண்டும் எனவும் மேற்படி பணியாளர்கள் தினமும் 50 வீடுகள் என்ற கணக்கில் ஆறு நாட்களுக்கு 6X50=300 வீடுகளில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளதன்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் மொத்தம் 18 வார்டுகளில் அமைந்துள்ள 7735 வீடுகளில் பணியினை மேற்கொள்ளவும் மொத்தம் 7735/300=26 கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டி உள்ளது. மேலும் தற்போது மழைக்காலம் என்பதால் நோய் தொற்றுகள் ஏதும் பரவாதவாறு பொதுமக்களை பாதுகாத்திடவும் மற்றும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி 26 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ஆறு மாதத்திற்கு தொகை ரூ.38.00 லட்சத்திற்கும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தம் 30.06.2024 உடன் முடிவடைகிறது. எனவே ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர்க்கு ஒப்பந்தம் 3 மாத காலத்திற்கு (01.07.2024 முதல் 30.09.2024 வரை) பணி நீட்டிப்பு செய்திடவும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் இப்பணிக்கான புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டவுடன் பழைய ஒப்பந்த நீட்டிப்பினை ரத்து செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.350/2017/எச்1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 22**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சியில் அமைந்துள்ள மொத்தம் 18 வார்டுகளில் 7735 குடியிருப்புகள் மற்றும் 1359 வணிக நிறுவனங்கள் தினமும் சேகரமாகும் மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை வாரச்சந்தை பகுதியில் உள்ள வளமீட்பு மையத்தில் (RRC) சேகரித்து வைக்கப்பட்டு வருகிறது. இந்த மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு எரிபொருளுக்காக SAN CONSTRUCTION COIMBATORE என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. அதற்கான ஜேசிபி இயந்திர வாடகை மற்றும் ஏற்றிச் செல்லும் லாரியின் வாடகை அனைத்தும் இந்நகராட்சியின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தினசரி சேகரிக்கப்பட்டு வரும் மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை பேல் செய்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1050/2024/எச்1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 23**

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.16

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA நாள்.08.09.2023இல் சாலையோர நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும். முறைப்படுத்தவும் இதற்கான இந்திய அரசு சட்டம் 2014 அத்தியாயம் –II பிரிவு 3ன் படி 5 வருடத்திற்கு ஒரு முறை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பணியினை விரைவில் முடிக்கப்பட வேண்டும். எனவும், கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட்டவுடன் அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச்சான்று வழங்கப்பட வேண்டும். எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சாலையோர நடைபாதை வியாபாரிகளின் வியாபாரக்குழுவை தேர்தல் நடத்தி தேர்வு செய்து அமைத்து வியாபார மண்டலம் அடையாளம் கண்டறிந்து பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் எனவும், சாலையோர வியாபார திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி வியாபாரக்குழு அமைப்பதற்கு முன்பாக கீழ்காணும் அலுவலர்களை கொண்டு விற்பனை குழு அமைக்கப்பட வேண்டும்.

| வ.எண் | விற்பனை குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | தலைவர் ,<br>நகர விற்பனை குழு | ஆணையாளர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி |
| 2 | உறுப்பினர் ,<br>நகர விற்பனைக் குழு | நகராட்சி பொறியாளர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி |
| 3 | கண்வீனர்,<br>நகர விற்பனைக் குழு | சமுதாய அமைப்பாளர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி |
| 4 | உறுப்பினர் ,<br>நகர விற்பனைக் குழு | நகரமைப்பு ஆய்வாளர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி |
| 5 | உறுப்பினர் ,<br>நகர விற்பனைக் குழு | காவல்துறை ஆய்வாளர்,<br>புன்செய்ப் புளியம்பட்டி |
| 6 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | சாலையோர வியாபாரிகள் சங்க தலைவர் |
| 7 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | இருப்பிட சங்க பிரதிநிதி |
| 8 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதி மற்றும் நகர தொழில் பிரதிநிதி |
| 9 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | வர்த்தக வணிக நிறுவன பிரதிநிதி |
| 10 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | மாவட்ட முன்னோடி வங்கி பிரதிநிதி |

| | | |
|---|---|---|
| 11 | உறுப்பினர்,<br>நகர விற்பனைக் குழு | நகர முக்கியஸ்த பெண் பிரதிநிதி |

மேற்காணும் விபரப்படி நகர விற்பனைக்குழு அமைக்கப்பட வேண்டும். இதன் பின்னர் கீழ்காணும் விபரப்படியான வியாபாரக்குழு அமைப்பதற்கு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சாலையோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 விதி 13(1) இன் கீழ் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

**5 உறுப்பினர்கள் கொண்ட வியாபாரக்குழு**

| | | |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்டோர் வகுப்பை சார்ந்தவர் | 1 உறுப்பினர் |
| 2 | பொது வகுப்பினர் | 1 உறுப்பினர் |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் | 1 உறுப்பினர் |
| 4 | சிறுபான்மையினர் | 1 உறுப்பினர் |
| 5 | மகளிர் வகுப்பினர் | 1 உறுப்பினர் |

மேற்காணும் விபரங்களை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.646/2016/எப்1)**

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 24**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள், எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் ஆகிய கடைகள் கடைகள் கட்டி 40 வருடங்களை கடந்துள்ளதால் மேற்கண்ட கடைகள் அதன் ஸ்திரத்தன்மை இழந்துள்ளது. மேலும் ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடை எண்.16-ல் உள்ள மொபைல் கடையின் மேற்கூரை கடந்த 20.03.2024 அன்று இடிந்து விழுந்து சேதமடைந்தது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள வணிக வளாக கடைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கடைகள் கட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்தல் பணிக்கு தனியார் கலந்தாலோசகர் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் புதிய வணிக வளாக கடைகள் கட்டுதல் பணிக்கு தேவையான திட்ட மதிப்பீடு தயார் செய்வதற்கு Jawaharlal Nehru National Urban Renewal Mission, Government of India வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்படும் திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1% தொகை தனியார் கலந்தோலோசகருக்கு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திட்ட மதிப்பீடு தயார் செய்தல் பணியினை மேற்கொள்ள தனியார் கலந்தாலோசகர் நியமனம் செய்யவும், மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்படும் திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1% தொகையை தனியார் கலந்தாலோசகருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1769/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 25**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.18**

நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் நகரமைப்பு பிரிவு சார்ந்த வழக்குகளை நடத்த வழக்கறிஞர்களுக்கு வழக்குக் கட்டணம் 2024-2025 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1183/2021/எப்1)**

**அலுவலகக் குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 26**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எதிராக தொடரப்படும் வருவாய் பிரிவு சார்ந்த வழக்குகளை நடத்த வழக்கறிஞனர்களுக்கு வழக்கு கட்டணம் 2024-2025 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.897/2024/அ1)**

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 27**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.20**

1) இந்நகராட்சி சொந்தமான திரு.வி.க திடல் கட்டண கழிப்பிடம், வாரச்சந்தை கட்டண கழிப்பிடம், பேருந்துநிலைய கட்டண கழிப்பிடம், ஆகியவற்றிக்கான கட்டண இரசீதுகள் விநியோகம் செய்திட 2024-2025 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2) இந்நகராட்சி சொந்தமான குத்தகை இனங்கள் ஏல அறிவிப்புகள் தினசரி நாளிதழ் மற்றும் மாநில அரசு நாளிதகளில் வெளியீடு செய்வதற்க்கான 2024–2025 ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.898/2024/அ1)**

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 28**

**தீர்மாணம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.21**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொறியியல் பிரிவில் தற்போது ஒரு பணி மேற்பார்வையாளர் பணியிடம் மட்டுமே உள்ளது. இந்நகராட்சியில் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் இரண்டு தொழில்நுட்ப உதவியாளர்களை பொதுப்பணித்துறையின் விலை விகிதத்தின் (PWD Schedule of Rates 2023–2024) படி வெளிக்கொணர்வு முகமை மூலமாக ஒப்பந்தப்புள்ளி பெற்று 6 மாத காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.51 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.889/2024/இ1)**

**அலுவலககுறிப்பு:-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 29**

**தீர்மாணம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.22**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் மற்றும் அண்ணாநகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள 10 நபர்களை தனியார் மூலமாக பணியமர்த்தி கொள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு பழைய விலை விகிதத்தில் ஜூலை–2024 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணி நீட்டிப்பு ஜூலை–2024 உடன் முடிவடைகிறது.

எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள 12 நபர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலமாக 6 மாத

காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.16.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.889/2024/இ1)

**அலுவலககுறிப்பு:-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 30**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.23</u>

மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள படி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு இந்நகராட்சிக்கு ரூ.2500/– நிர்ணயம் செய்யப்பட்ட சந்தா தொகையை இந்திய செஞ்சிலுவை சங்க ஈரோடு மாவட்ட கிளைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.574/2024/எச்1)

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 31**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

//உண்மைநகல் உத்தரவுப்படி//

For ஆணையாளர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

28/6/2024